இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடவுள் வடிவில் விளங்கிய கிறிஸ்து, கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். (பிலி 2:6-10)

# கடவுளின் முன்மாதிரியைப் பின்பற்றி, உண்மையான தந்தையின் உணர்வில் செயல்பட வேண்டும்!

வத்திக்கான்: 1873 ஆம் ஆண்டு இத்தாலியின் தூரின் நகரில் புனித Leonardo Murialdo என்பவரால் இளையோர் பணிக்காக துவங்கப்பட்டு 150 ஆவது ஆண்டைக் கொண்டாடும் புனித யோசேப்பு சபையினரிடம் தூய தெளிந்து தேர்தலும் நம்பிக்கையும் கொண்டு, இளையோரிடம் சிறப்பான அக்கறையுடன் செயல்பட்ட புனித யோசேப்பு சபையின் புனிதர் போல செயல்படக் கேட்டுக் கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்,



*புனித யோசேப்பு சபையினருடன் திருத்தந்தை பிரான்சிஸ்*

ஆவியானவரை யாரும் கட்டுப்படுத்த முடியாது, அவர்தான் நம்மை முன்னோக்கி கொண்டு செல்கிறார் என்று எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தொடர்ந்து அச்சபையினர் தம் பணிகளைச் சிறப்புடன் செய்ய வாழ்த்தினார்.

கடவுளின் முன்மாதிரியைப் பின்பற்றி, உண்மையான தந்தையின் உணர்வில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இளையோர் பணிகளில் கனவு காண்பதை ஒருபோதும் நிறுத்த வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கடவுள் அன்பிற்கு முதன்மை கொடுக்கப்படுதல், மாறிவரும் உலகில் கவனம் செலுத்துதல், தந்தைக் கடவுளின் இரக்கத்தின் இனிமையை உணர்தல் போன்றவற்றை எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுள் அன்பின் அனுபவத்தை ஆழமாக உணர்ந்து தன்னை வலிமையானவராக, உறுதியானவராக மாற்றிய புனித லியோனார்டு போல அச்சபையினர் வாழவும் வலியுறுத்தினார்.

மேலும், பிறரன்புப் பணிகள் செய்ய சிலுவையை எவ்வாறு சுமக்க வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், அதற்கு இறை வேண்டல், தியாகச்செயல்கள் முக்கியமான தேவை என்று வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம்பிக்கை இல்லாத ஒருவன் எவ்வாறு கடவுளை மகிழ்ச்சிப்படுத்த முடியாதோ அது போல, இனிமையான வார்த்தைகள் இல்லாமல் ஒருவன் தன் அருகில் வாழ்வோரை மகிழ்ச்சிப்படுத்த முடியாது என்றும், இவை எளிய வாழ்க்கை மற்றும் திருத்தூது வாழ்க்கைக்கான சக்திவாய்ந்த திட்டம் என்றும் கூறினார்.

இளம் தொழிலாளர்களின் எதிர்காலத்தைத் திட்டமிடவும், அவர்களின் குரல்களைக் கேட்கவும், ஒருவருக்கொருவர் உதவவும் கற்றுக் கொடுத்த புனித Leonardo Murialdo வைப் போல, இளையோர் வாழ்வில் முன்னேற்றத்தைக் கொண்டு வரவும், கடவுள் மக்களின் வாழ்விலும், இறைத் துறவறத்திலும் உள்ளவர்களின் மதிப்பைப் புரிந்து வாழவும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

***மெரினா ராஜ் – வத்திக்கான்***

# குவந்தானில் மரியாவின் சேனை ஒன்றுகூடல்

**குவந்தான்:** கடந்த 20 மார்ச், 2023-ம் திகதி இங்குள்ள புனித தோமையார் பங்கின் மரியின் சேனை குழுவினர் தங்களின் ஆண்டு ஒன்றுகூடல் நிகழ்ச்சியொன்றை சிறப்பாகக் கொண்டாடினர். ஏறக்குறைய 50 பேர் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில், தமிழ், ஆங்கிலம், சீனம் பேசும் அங்கத்தினர் கலந்துகொண்டனர். அத்தோடு, இந்தப் பங்கின் மரியின் சேனையானது பல ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த அருள்தந்தை லியோ சான் அவர்களால் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.




அன்று இரவு 7.00 மணிக்கு, மூன்று மொழிகளிலும் செபமாலை இறைவேண்டலும் திருப்பலியும் கொண்டாடப்பட்டது. திருப்பலியின்போது, நம்பிக்கை அறிக்கையைத் தொடர்ந்து சீனப் பெண்மணிகள் இருவர் *'நான் என்றும் உமக்குரியவர், என் அரசியே, என் தாயே, எனக்குள்ளதெல்லாம் உமக்குரியதே'* என்று தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றினர்.



*மரியாவின் சேனை பதக்கத்தை அணிவிக்கிறார் அருள்தந்தை ஜோர்ஜ் பாக்கியசாமி அவர்கள்*

அடுத்து, அன்னை மரியாவிற்கான அர்ப்பணிப்பு இறைவேண்டலைத் தொடர்ந்து ஒவ்வொரு உறுப்பினருக்கும் மரியாவின் சேனை பதக்கம் வழங்கப்பட்டது. அன்னை மரியாவைப் போல் நம்பிக்கை வாழ்வில் துணிவாகவும், எங்குச் சென்றாலும் இறையன்பின் ஒளியை ஒளிரச்செய்யும் மக்களாக வாழும் அருள்பெற வேண்டிக் கொண்டனர். பங்குத்தந்தை அனைவருக்கும் வாழ்த்தினைத் தெரரிவித்துகொண்டார்.

நிறைவாக, புனித மரியே, புனித யோசேப்பே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் எனும் மன்றாட்டு முன்வைக்கப்பட்டது.

# பூச்சோங், புனித குவடலுப்பே அன்னை பங்கில் உறுதிபூசுதல் மாணவர் முகாம்

பூச்சோங்: இங்குள்ள குவடலுப்பே அன்னை ஆலயத்தைச் சேர்ந்த உறுதிப்பூசுதல் மாணவர்கள் கடந்த மார்ச் 18 &19 தேதிகளில் 'உடலின் இறையியல்' என்னும் சிறப்பு முகாமில் கலந்துகொண்டனர். இந்த முகாமை மாமறைமாவட்டத்தைச் சேர்ந்த குழுவினர் அருள்சகோதரி ரீத்தா அவர்களின் தலைமையில் வழிநடத்தினார்கள். அவர்களைப் பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பு 17 வயது நிரம்பிய இந்த இளையோருக்கு மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்தது. உடலின் இறையியல் என்னும் இந்த முகாம் திருமணம் மற்றும் பாலியல் தொடர்பான அன்பு ஆகியவற்றைப் பற்றிய



தொடர் மறைபோதகமாகப் பார்க்கப்படுகிறது. பதின்ம வயதினர் எளிதில் பாதிப்புக்குள்ளாவது மற்றும் இதன் தொடர்பான கேள்விகளுக்கும் எண்ணங்களுக்கும் பதில் அளிக்கும் வகையில் இது ஒரு அறிமுகமாக அமைந்துள்ளது.

தொடர்ச்சியை அடுத்தப்பக்கம் காண்க. .

# பூச்சோங், புனித குவடலுப்பே அன்னை பங்கில் உறுதிபூசுதல் மாணவர் முகாம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கைத் துணையின் அன்பு, விவிலிய ஒப்புமை, மனித வாழ்க்கைக்கான கடவுளின் முழு திட்டம், அதன் தோற்றம் மற்றும் தற்போதைய நிலை வரை சிறந்த மற்றும் தெளிவான புரிதலுடன் இந்த முகாம் அவர்களுக்கு விளக்கமளித்தது.



*வழிநடத்துனர்களோடு உறுதிப்பூசுதல் முகாமில் கலந்துகொண்ட மாணவர்கள்*

உடலின் இறையியல் கடவுள் அன்பின் புதிய கண்ணோட்டத்தை நமக்குத் தருகிறது. இது மனித மாண்பு, அடையாளம், நோக்கம் ஆகியவற்றைப் பற்றிய ஆழமான விழிப்புணர்வுக்கு கொண்டுசெல்கிறது. இந்த தூரநோக்கு வியப்பு, அமைதி, மகிழ்ச்சி, தன்னையும் பிறரையும் மதிக்கும் உணர்வு ஆகியவற்றை உருவாக்குகிறது. உடலைப் பற்றிய இறையியல் ஒருவரின் வாழ்க்கையை உலகுக்குப் பரிசாகத் தரும் திறனில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது ஆகிய போதனைகளை இந்த முகாமில் வெளிப்படுத்தப்பட்டன. முகாமின் இரண்டு நாட்களும் உறுதிப்பூசுதல் மானவர்கள் FTFF(Free, Total, Faithful and Truthful) இலவசம், முழுமை, நம்பிக்கை மற்றும் உண்மை என்ற வார்த்தைகளுக்கு மீண்டும் மீண்டும் பொருளைக் கண்டுணர்ந்தன்ர. முதல் சொற்பொழிவில், கடவுளின் வழியாக அன்பைக் கண்டறிதல் என்பதில் பலரது கண்கள் திறக்கப்பட ஒரு வாய்ப்பாக அமைந்த்து.

முதல் நாளின் நிறைவில் மாணவர்கள் ஒப்புரவு அருளடையாளத்தில் பங்குகொள்ளவும், பின்னர் குடும்பத்தினரோடு நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்குப்பெறவும் ஊக்குவிக்கப்பட்டனர்.

இரண்டாம் நாளில் இறை அழைப்பை அறிதல், தூய எண்ணத்தோடு ஒருவரோடு ஒருவர் நட்புறவில் ஈடுபடுவது, நல்லனவற்றுக்காக வாழ்வது (முழு உள்ளத்தோடு) என்ற கருப்பொருளில் பகிர்வு அமைந்தது. பலரும் இந்தப் பகிர்வில் ஆர்வத்தோடு கலந்துகொண்டனர். தாங்கள் கொண்டிருக்கும் உறவுகளில் எது ஆபத்தானது என்று கண்டுபிடிக்க பல்வேறு எடுத்துக்காட்டுகள் அவர்களுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டது. கடவுளுக்கு உகந்தது எது? எதிரானது எது என்றும், பேச்சாளர்களோடு மாணவர்கள் தங்களுடைய கேள்விகளால் வெளிப்படையாக உரையாடினார்கள். இந்த இரண்டு நாள் முகாமில் பங்கெடுத்துக் கொண்ட மாணவர்களின் பெற்றோர்களுக்கும் தனியாக ஒரு பகிர்வை அருள்சகோதரி ரீத்தா அவர்கள் வழங்கி இந்த முகாமை நிறைவு செய்தார்.

## சமய நம்பிக்கை பொருட்டு சித்ரவதைகளை அனுபவிப்பது தொடர்கிறது

வத்திக்கான்: தங்கள் மத நம்பிக்கைகளின் காரணமாக இன்றைய உலகில் எண்ணற்ற தனியார்களும் சமுதாயங்களும் துன்பங்களை அனுபவித்துவரும் நிலையில் மத விடுதலை அனைத்துலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது அமைதிக்கு இன்றியமையாதது என ஐ,நா.வின் மனித உரிமைகள் அமைப்பில் ஐ.நா.விற்கான திருப்பீட பிரதிநிதி பேராயர் Fortunatus Nwachukwu தெளிவுப்படுத்தினார்.

வழிபாட்டுத்தலங்கள் தாக்கப்படுவது, மதத்தலைவர்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுவது போன்றவை அண்மைக்காலங்களில் அதிகரித்து அது ஒரு பொதுவான நிகழ்வுபோல் தோற்றம் தரப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

அண்மை புள்ளிவிவரங்களின்படி, உலகின் ஒவ்வொரு 7 கிறிஸ்தவர்களுள் ஒருவர் சித்ரவதைக்கு உள்ளாக்கப் படுகிறார்கள் என்ற செய்தியையும் ஐ.நா. மனித உரிமைகள் அவையில் எடுத்துரைத்தார் திருப்பீடப் பிரதிநிதி பேராயர் Nwachukwu.

பல நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான சித்ரவதைகள் அதிகரித்துவருவது கவலை தருவதாக உள்ளது என்ற பேராயர், மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அரசுகளின் கடமைகள் நிறைவேற்றப்படவேண்டும், ஏனெனில்,



பேராயர் Nwachukwu

இது பொது நலனை நோக்கியப் பாதை எனவும் எடுத்துரைத்தார்

## நல்ல சீடர் தனது சிலுவையை தானே சுமப்பார்!

இன்று குருத்து ஞாயிறைக் கொண்டாடுகிறோம். புனித வாரத்தின் தொடக்கமாகவும், நுழைவு வாயிலாகவும் குருத்து ஞாயிறு அமைகின்றது. தாவீது குலத்தில் முன்னறிவிக்கப்பட்டு பிறந்த இயேசு, மனித குல மீட்புப்பெற, துன்பத்தை தனது தந்தையின் விருப்பத்தின்படி ஏற்று வெற்றி வீரராய் எருசலேம் நகருக்குள் நுழைகிறார். நாம் வாழ்வு பெற இயேசு வாழ்வை இழக்க தயாராகும் இலட்சியப்பயணம் இது.

அடிப்போருக்கு என் முதுகையும் தாடியை பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை. (ஏசாயா 50:6). உண்மையான ஊழியனின் சொற்கள் இவைதான். தன் குற்றமில்லா நிலையிலும் தண்டனையை ஏற்கிறார். மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களை சுமந்துக் கொண்டார். நாமோ, அவர் கடவுளால் வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டவர் என்றும் சிறுமைப்படுத்தப்பட்டவர் என்றும் எண்ணினோம்.(எசாயா53:4)

நாமும் இயேசுவைப் போன்று "துன்புறும் ஊழியர்களாக இருப்போமா? துன்ப துயரங்களில் இறைவனின் கரத்தைக் காண்போமா?" "கடவுளாகிய ஆண்டவர் எனக்கு துணை நிற்கிறார்" என்று கூறுவோமா? "உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்று மகாகவி பாரதியார் முழக்கமிட்டது போன்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் எப்பேர்ப்பட்ட சோதனைகளை எதிர்நோக்கினாலும் தைரியமாக சவால்களை ஏற்று கொண்டு வெற்றி ஆர்ப்பரிப்போடு தன் இலக்கை அடைந்தார். பாடுகளின்றி இயேசுவுக்கு மாட்சி கிடையாது. துன்பமின்றி நமக்கும் மீட்பு கிடையாது. விதை தன்னையே அழித்துக் கொள்ளும்போதுதான் அது செடியாக வாழ்வு பெறுகிறது. தன்னுடைய பாடுகளினாலும் மரணத்தினாலும் இயேசு இறைத் தந்தையால் உயர்த்தப்பட்டு, "ஆண்டவர்" என்னும் பெயர் பெறுகிறார்.

நாமும் சில தருணங்களில் நம்முடைய சுயநலத்தினால் பணி வாழ்வுக்கு சாத்தியமில்லா காரணங்களை முன்வைத்து உலக போக்குகளுக்கு முக்கியத்துவம் வழங்குகிறோம். "வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும், வாசல் தோறும் வேதனை இருக்கும், வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை, எதையும் தாங்கும் இதயம் இருந்தால் இறுதி வரைக்கும் அமைதி இருக்கும் என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப தன் சிலுவையை சுமந்துக் கொண்டு, தாழ்ச்சிசோடு இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வை வாழ்வோம்.

உண்மையான தாழ்ச்சி என்பது கூழை கும்பிடு போடுவது அல்ல, மாறாக, மற்றவருடைய உயர்வுக்கு ஒருவர் எந்தளவுக்கும் கீழே இறங்கி வருவது ஆகும். இத்தகைய தாழ்ச்சிக்கு இயேசுவே மிகப்பெரிய முன்னுதாரணமாக இருக்கின்றார். “கடவுளிடம், என்னுடைய பிரச்சனைகள் பெரிது என்று புலம்புவதைவிடுத்து, பிரச்சனைகளிடம், என்னுடைய கடவுள் மிகப்பெரியவர் என்று முழங்குவோம். இயேசுவின் பணியைச் செய்யக்கொடிய நமக்கு வரக்கூடிய துன்பங்களைத் துணிவுடன் ஏற்றுக் கொள்வோம், இறைவனின் பாதுகாப்பை உணர்வோம்.

-ஆ. லூர்தம்மாள், காஜாங்

**குருத்து ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | எசாயா 50:4-7 |
| தி. பாடல் | 22: 7-8. 16-17a. 18-19. 22- |
| 23 வாசகம்: | பிலி 2: 6-11 |
| நற்செய்தி: | மத்: 26: 14- 27: 66 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- குறுத்து ஞாயிறு**